நகரத்தார் குரல்

(சமூக, இலக்கிய மாத இதழ்)



கண்காட்டும் நெற்றியினான் கனல்காட்டும் கையுடையான்
வெண்காட்டில் வளர்ஈசன் மேனியிலே ஒருபாதி
பெண்காட்ட வைத்தானும் பிரம்மவித்யா நாயகியே!
பண்காட்டும் இசைபாடப் பதங்காட்டி அருள்வாயே.

ஜூலை 1990

உ

சிவமயம்



நகரத்தார் குரல்

(சமூக, இலக்கிய மாத இதழ்)

குரல் 9

ஒலி 6

பிரமோதூத ஆனி

ஜூலை 1990

கண்ணாய் ஏழுலகும் கருத்தாய் அருத்தமுமாய்ப்
பண்ணார் இன்தமிழாய்ப் பரமாய பரஞ்சுடரே!
மண்ணார் பூம்பொழில்சூழ் மழபாடியுள் மாணிக்கமே!
அண்ணா நின்னையல்லால் இனி யாரை நினைக்கேனே

— சுந்தரமூர்த்தி சுவாமிகள்

ஆசிரியர்:
வி. என். சிதம்பரம் செட்டியார்

வெளியிடுபவர்:
சுப. அ. நடராசன் செட்டியார்

துணை ஆசிரியர்:
எல். சுந்தரம்

அலுவலகம்:
25, வடக்குச் சித்திரை வீதி,
மதுரை-625 001

தொலைபேசி: p. p. 26668

ஆண்டுச் சந்தா ரூ. 24-00 டெபாசிட் சந்தா ரூ. 200-00

இராமேஸ்வரம் - காசி நடைப் பயணக் குழு அமைப்பாளரின் கடிதம்

வணக்கம். நாங்களும் 1-3-90 அன்று இராமேஸ்வரத்தி லிருந்து நடைப் பயணத்தைத் தொடங்கி 90 ஆவது நாளான இன்று (29-5-90) இங்கு நலமாக வந்து சேர்ந்தோம்.

தமிழ்நாடு, கர்நாடகா, ஆந்திரா, மகாராஷ்டிரா ஆகிய நான்கு மாநிலங்களைக் கடந்து ஐந்தாவது மாநிலமாகிய மத்திய பிரதேசத்தில் இப்போது வெற்றி நடை நடந்து கொண்டிருக்கின்றோம்.

வரும் வழியில், காவேரி, தென்பெண்ணை, பெண்ணாறு துங்கபத்திரா, கிருஷ்ணாநதி, கோதாவரி நதி, பென்கங்காநதி, வார்தாநதி, வாணுநதி, பின்னி நதி, கன்ஹான்நதி, வெய்ன் கங்காநதி, ஆகிய பல புண்ணிய நதிகளில் நீராடி மகிழ்ந்தோம்.


ஆந்திராவில் உள்ள சாத்பூரா மலை - 1680 அடி உயரம்- வட்ட மலை, மத்தியபிரதேசத்தில் உள்ள 1400 அடி உயரம் உள்ள விந்திய மலை போன்ற பல கடுமையான ஏற்றமுள்ள மலைகளைக் கடந்து வந்துள்ளோம். அடர்த்தியான காடுகள் உள்ள மலைப் பகுதிகளை யும் பல பயங்கர மிருகங்கள் உலவுகின்ற பகுதிகளையும் பெரியவர்கள் ஆசியாலும் இறையருளாலும் எந்தவித இடையூறுமின்றி கடந்து வந்துள்ளோம்.

இங்கிருந்து வாரணசி 541 கி. மீ. தொலைவில் உள்ளது. 28 நாள் பயணம் சென்று 29 ஆவது நாள் 27-6-90 அன்று காலை 9 மணிக்கு காசிவிஸ்வநாதர் கோவில் போய்ச் சேர்ந்துவிடுவோம்.

இதுவரையில் பயணத் திட்டப்படி இறையருளால் நடைப் பயணத்தை மேற்கொண்டிருக்



ஆந்திர மாநிலம் சித்த ராமேஸ்வரம் கோயிலில் சிற்பியுடன் திருவாளர்கள் சோம. வெள்ளையன், திருத்தொண்டர் ஆர் வயிரவன் (அமைப்பாளர்), ஆர். எம். என். கோவிந்தன் செட்டியார், பி. சுவாமிநாதன், எஸ். காமாட்சி சுந்தரம் (நிற்பவர்)



தேவகோட்டை சித. செ்ா. ந. வீரப்ப செட்டியார் அவர்கள் புதல்வன் செல்வன் சிதம்பரம் என்ற நடேசன் B. A. க்கும் மேற்படி ஊர் தெ சுப முத்துக்கருப்பன் செட்டியார் அவர்கள் புதல்வி செல்வி மீனாட்சி B. Com. க்கும் 28-5-90 அன்று தேவகோட்டையில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

கின்றோம்.

கரஞ்சி என்ற ஊரில் இருக்கும்பொழுது கடுமையான புயலும் காற்றும் அடித்தது. பல இடங்களில் மழையில் நனைந்து சென்றோம். நேற்றும் பஞ்சாரிமா என்ற இடத்தில் கடுமையான மழை பெய்தது.

எல்லா மாநிலங்களிலும் மக்களின் வரவேற்பு எங்கள் பயணத்திற்கு மிகவும் உற்சாகத்தைக் கொடுத்து வருகின்றது.

நாங்கள் ஆந்திராவில் உள்ள சித்தராமேஸ்வரம் கோயிலுக்கு-60வது நாள் (29-4-90) சென்று சுவாமி தெரிசனம் செய்தோம் அருமையான கோவில். நல்ல சூழ்நிலை. அவசியம் பார்த்துத் தெரிசிக்க வேண்டிய இடம். அங்கு சிற்பி ஒருவர் மலையில் ஜோதிர்லிங்கம் 12 ஐயும் செதுக்கிக் கொண்டிருந்தார்.

நாங்களும் 27-6-90 அன்று காசி சென்று 7-7-90 காசியிலிருந்து புறப்பட்டு திருப்பதி, சென்னை, இராமேஸ்வரம், திருச்செந்தூர் சென்று 14-7-90 காலை மதுரை வந்து சேர்கிறோம். 15-7-90 காலை தேவகோட்டையில் உள்ள அமைப்பாளராகிய எனது இல்லம் சென்றடைகிறோம்.

தங்களன்புள்ள

ஆர். வயிரவன்

அமைப்பாளர்

முகாம் : லக்னோடவன்

மத்தியப் பிரதேசம்

29-5-90

வாழ்த்துகிறோம்

திரு. வீர. வீரப்பன் (நா. லெ. வீர. வீர.) தேவகோட்டையைச் சேர்ந்தவர். காரைக்குடி அழகப்பா கல்லூரியில் B. Com தேர்ச்சி பெற்ற இவர், 1954 டிசம்பரில் தேவகோட்டை சுப. சேவு. மெ. அவர்கள் இயக்குநராக இருந்தபோது இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் சேர்ந்து சென்னையில் சிறப்பு எழுத்தாளராகப் பணியாற்றினார். பின்பு அதிகாரியாகப் பதவி உயர்வு பெற்று தமிழகத்தில் பல ஆண்டுகள் பணியாற்றினார். 1975ல் கோவையில் மண்டல மேலாளராகப் பொறுப்பேற்று வேளாண்மை, சிறுதொழில் வளர்ச்சிக்குப் பெரும் பணியாற்றினார்.

1980ல் உதவிப் பொது மேலாளராகப் பதவி உயர்வு பெற்று கல்கத்தாவிற்கு மண்டல மேலாளராகப் பணியாற்றச் சென்றார்.

சென்னை மத்திய அலுவலகத்தில் பணியாற்றிய காலத்தில் 1985ல் துணைப் பொது மேலாளராகப் பதவி உயர்வு பெற்று வங்கியின் நிதி நிர்வாகம், கணக்குத் துறையைக் கவனித்தார்.

இப்போது இவர் பொது மேலாளராகப் பதவி உயர்வு பெற்று சென்னை மத்திய அலுவலகத்தில் பணியாற்றி வருகிறார். அவருக்கு நமது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இவருடைய சகோதரர்கள் அமெரிக்காவிலும் தாய்லாந்திலும் பெரிய பதவிகளில் இருக்கிறார்கள் இருவர் பொறியாளர்களாக செயலாற்றி வருகிறார்கள்.



இவருடைய தமக்கையார், தேவகோட்டை தமிழ் வள்ளல் சுப. சேவு மெ. சேவுகன் செட்டியார் அவர்களது மனைவியாவார்.

எனது வெளிநாட்டு அனுபவங்கள்

வி.என். சிதம்பரம்



—54—

ஐரோப்பாவில் பல இடங்களில் மலையைக் குடைந்து இரயில் பாதையை அமைத்திருக்கிறார்கள் சில இடங்களில் ஒரு மைல் தொலைவுகூட மலையைக் குடைந்து இரயில் பாதை போட்டிருக்கிறார்கள். ஆங்கிலத்தில் அதற்கு ''டனல்'' என்று பெயர். மலைக் குகையில் கார்கள் போவதற்த இரண்டு பாதையும், வருவதற்கு இரண்டு பாதையும் ஆக நான்கு பாதைகளை அமைத்திருக்கிறார்கள். மலையைக் குடைந்து செல்லும் பாதை பகலிலும் இருட்டாக இருப்பதால் குகை முழுவதும் மின்சார விளக்குகளை அமைத்திருக்கிறார்கள். அவை 24 மணி நேரமும் எரிந்துகொண்டிருக்கின்றன. கார்களும் ஒன்றன்பின் ஒன்றாக முழு வேகத்துடன் போய் கொண்டிருக்கும். அப்படி ஒரு மலைக்குகையின் வழியாக எங்கள் வேன் சென்றுகொண்டிருந்தபோது எங்கள் வேனில் உள்ள



ரோமில் 50 ஆயிரம் பேர் அமர்ந்து பார்க்கக்கூடிய விளையாட்டுத் திடலில் திரு ஏஎல். பெரியகருப்பன் அவர்கள்.

நமது இதழின் ஆசிரியர்
வி. என். சிதம்பரம் செட்டியார் அவர்கள்
எழுதும்

"எனது ஆலய அனுபவங்கள்"

தொடர் கட்டுரை
விரைவில் தொடங்கவிருக்கிறது.

டயர்களில் ஒன்று வெடித்து வேனும் தாறுமாறாக ஓடியது. அதிர்ஷ்டவசமாக எங்களுக்குப் பின்னால் எந்தக் காரும் வராததால் நாங்கள் ஆபத்தில்லாமல் தப்பித்தோம். தாறுமாறாக ஓடிய வேனை ஓட்டிவந்த எங்கள் டாக்டர் ஜெயப்பிரகாஷ் ஸ்டேரிங்கை கெட்டியாகப் பிடித்து நிறுத்திவிட்டதாலும் ஆபத்திலிருந்து தப்பினோம். இதுபோன்ற குகைகளில் ஆங்காங்கே போலீஸ்காரர்கள் நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறார்கள் ஏதாவது விபத்து நடந்தால் காரை ஓரமாகத் தள்ளி நிறுத்திவிடுவார்கள். அதே போல போலீஸ் எங்களுக்கு உதவி புரிந்து எங்கள் வேனை பாறை ஓரமாக நிறுத்தினார்கள். வேனுக்குப் பக்கத்தில் இரண்டு போலீஸ் ஜீப்புகள் நின்றன. அந்த நேரத்தில் வேகமாக வந்த ஒரு லாரி வழியில் நின்ற எங்கள் வேனுடனும், போலீஸ் ஜீப்புடனும் மோதாமல் தடுப்பதற்கு அந்த லாரி டிரைவர் லாரியை பாறையில் மோதி நிறுத்தினார். லாரி பெரும் விபத்துக்குள்ளாகியது. அதன் பிறகு நாங்கள் வேன் டயரை மாற்றிக் கொண்டு பக்கத்து ஊருக்குச் சென்றோம் அங்கு ஒரு கடையில் நிறுத்தி டயர் வேண்டுமென்று விசாரித்தபோது அந்தக் கடைக்காரர் பக்கத்து வீதியிலிருந்து டயர் வாங்கித் தருவதாகச் சொல்லி மூன்று சக்கர வண்டியை எடுத்துக் கொண்டு புறப்பட்டார். அந்த மூன்று சக்கர வண்டியும் விபத்துக்குள்ளாகியது. எங்களுக்கு நேரம் சரியில்லையென்று எங்கள் வேனை அந்த ஊரிலேயே நிறுத்திவிட்டு இரயில் மூலம் ரோமிற்குப் பயணமானோம்.

ரோமில் எங்கு பார்த்தாலும் சர்ச்சுகளாகக் காட்சியளித்தன. "ரோமில் உள்ள சர்ச்சுகளையெல்லாம் பார்க்க எத்தனை நாளாகும்" என்று அங்கு ஒருவரைக் கேட்டேன். "இங்குள்ள எல்லா சர்ச்சுகளையும் பார்க்க வேண்டுமானால் ஒரு ஆண்டுக் காலம் ஆகும்" என்று அவர் சொன்னார். குறிப்பாக வாடிகன் சிட்டிக்குச் சென்றோம். அங்குதான் போப் ஆண்டவர் இருக்கிறார். அங்கு போப் ஆண்டவரைச் சந்தித்து ஆசிபெறும் பாக்கியமும் பெற்றோம். வாடிகன் சிட்டி தனி ஊராகக் காட்சியளிக்கிறது. ஒரு நாள் முழுவதும் சுற்றிப் பார்த்தோம். ஒரு மனிதன் வாடிகன் சிட்டியை சுற்றி பார்த்துக் கொண்டு வந்தாலே யாரும் கட்டாயப்படுத்தாமல் அவனே கிறிஸ்துவனாக மாறும் அளவிற்கு அங்கு சிலைகள் முதலியன காணப்படுகின்றன. ஊரைச் சுற்றிப்பார்த்தபோது எங்கு பார்த்தாலும் அரண்மனைகளும், கோட்டைகளுமாக காட்சியளித்தது. அரசரும் 50 ஆயிரம் பேர்களும் அமர்ந்து வீர விளையாட்டுக்களைப் பார்க்கின்ற திடலை 2500 ஆண்டுகளுக்கு முன்பே அங்கு அமைத்திருக்கிறார்கள். ரோமில் திருட்டு பயம் அதிகம்.

காவிரிப்பூம்பட்டின நகர விடுதி: சாப்பாட்டுக் கூடம் திறப்பு விழா!

காவிரிப்பூம்பட்டினம் நகர விடுதியில் புதிதாகக் கட்டப் பெற்றுள்ள சாப்பாட்டுக் கூடத்தின் திறப்பு விழா ஆடி மீ 14உ (30-7-90) திங்கள்கிழமை மாலை 4 மணி அளவில் நடைபெறும் எனவும் மேற்படி சாப்பாட்டுக் கூடத்தை 'அறமனச் செம்மல்' திரு. சேவு. அண. அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் தலைமையில் 'மீனாட்சி திருமைந்தன்' திரு. வி. என். சிதம்பரம் செட்டியார் அவர்கள் திறந்து வைக்க இருக்கிறார்கள் எனவும் ஸ்ரீ விசாலம் சிட் பண்டு லிட் நிறுவனத்தின் முது நிலை மேலாளரும் மேற்படி நகர விடுதிக் கட்டிட விஸ்தரிப்புக் குழுவின் தலைவருமான 'இரசிகமணி' ஆர் எம். சிதம்பரம் செட்டியார் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

ரோமிலிருந்து ஆஸ்ட்டிரியாவுக்குச் சென்றோம். அங்கு இன்ஸ்பொக் என்ற ஊரைச் சுற்றிப் பார்த்தோம் ஊர் மிக அழகாக இருந்தது அங்கிருந்து ஜெர்மனிக்குச் சென்றோம் மேற்கு ஜெர்மனியில் ஸ்டக்காட், பிராங்பெர்ட், பான். முதலிய நகரங்களைச் சுற்றிப் பார்த்தோம். அங்கிருந்து ஹாலந்துக்குச் சென்றோம். ஹாலந்தில் ஆம்ஸ்டெர்டாம், ரோட்டர்டேம் என்ற நகரங்களைச் சுற்றிப் பார்த்தோம். அங்கிருந்து பெல்ஜியம் வந்தோம். பெல்ஜியத்தில் புரூசெல்ஸ் என்ற நகரத்தைப் பார்த்துவிட்டு மீண்டும் பிரான்சு வழியாக இலண்டன் வந்து சேர்ந்தோம். 16 நாட்களில் வேனில் 2500 மைல்கள் சுற்றினோம். பிறகு இலண்டனில் ஒரு வாரம் இருந்து விட்டு எல்லோரும் மகிழ்ச்சியுடன் இந்தியா திரும்பினோம்.

(முற்றும்)

நாகப்பன் - கீதா திருமண வாழ்த்தரங்கில்...

எனது அருமை நண்பர் சீனுதானுவோடு சேர்ந்து வாசலிலே நின்று வரவேற்க வேண்டியவர்கள் வரிசையிலே இருக்க வேண்டியவன் நான். இட நெருக்கடி காரணமாக என்னை உள்ளே அனுப்பி விட்டார்கள். செட்டி நாட்டிலே எனக்கு நிறைய நண்பர்கள் இருக்கிறார்கள். அவர்களுடைய இல்லத் திருமணங்களுக்கெல்லாம் நான் சென்றிருக்கிறேன். ஆனால் இது புதுவிதமான திருமணம். தக்காராக இருந்தவர் புரட்சித் திருமணத்தை நடத்தியிருக்கிறார். இத்திருமணம் தமிழ்த் திருமணம் - இரண்டு மாலைகள்; சொற்பொழிவாளர் என்று. எனக்கு இது ஒன்றும் புதிதல்ல. நான் அப்படித்தான் திருமணம் செய்து கொண்டேன் தமிழ்த்திருமணம் செய்து கொண்டவர்களில் நான் முதலாமவன். சீனுதானுவை 'புரட்சிச் செட்டியார்' என்று கூடச் சொல்லலாம். இத்தம்பதி ஆல்போல் தழைத்து அருகு போல் வேரூன்றி சிறந்த வாழ்வு வாழ முருகப்பெருமானை வணங்கி வாழ்த்துகிறேன்.

— 'நடிகர் திலகம்' சிவாஜி கணேசன்

என் தந்தையார் காலத்தில் வி. என். சிடி. அவர்கள் வீட்டுத் திருமணத்தில மூன்று நாட்களும் கலந்து கொள்வார்கள். வி. என். சிடி. அவர்கள் என்னை அழைத்தபோது நான் அவசியம் வருவதாக ஒப்புக் கொண்டு அதன்படி ஊட்டியிலிருந்து என் மனைவியோடு வந்திருக்கிறேன். அரசியல் உலகம் மட்டுமல்ல; கலை உலகம் மற்றும் திரளானவர்கள் கலந்து கொண்டு இத்திருமணத்தைப் பெருமையாக நடத்துகிறார்கள் என்றால் அது சீனுதானுவுக்குள்ள 'பாப்புலாரிட்டி' என்றே சொல்ல வேண்டும்.

— டாக்டர் எம். ஏ. எம். இராமசாமி

இது காதல் திருமணம். இவர்களைப் பாருங்கள். இவர்கள் காதலித்திருப்பார்கள் என்று நம்ப முடிகிறதா? அவர்கள் விரும்பியபடி இத்திருமணம் நடந்திருக்கிறது. நகரத்தார் பையன்களுக்கு காதல் முனைப்பு இருப்பதில்லை. சீர்திருத்தங்களுக்கு இது போன்ற காதல் திருமணங்கள் அவசியம். மணமகன் நாகப்பன் நகரத்தார் சமூகம் பார்த்து, அடுத்த கோயில் பார்த்து, தரம் பார்த்துக் காதலித்திருக்கிறார். எனவே மறுப்பேதுமில்லாமல் திருமணம் ஜாம்

ஜாம் என்று நடந்து முடிந்திருக்கிறது. மணமகன் சமத்தன் மாள் சமத்தன் தான். ஒரு தடையும் இல்லாமல் ரூட் பார்த்து காதலித்துத் திருமணம் செய்து கொண்டுள்ள நாகப்பனைப் பாராட்டுகிறேன். நாகப்பனின் உறுதியைப் பாராட்டுகிறேன்.

— பழ. கருப்பையா
(திரைப்படத் தயாரிப்பாளர்)

அனைத்துத் துறைகளையும் சேர்ந்தவர்களை இத்திருமணத்திற்கு அழைத்த பெருமை வி. என். சிதம்பரம் அவர்களைச்சேரும். வி. என். சிடி. அவர்கள் காதல் மன்னன் தான். ஹாஜஹான் தன் மனைவி நினைவாக தாஜ்மகாலைக் கட்டினான். அது போல் வி. என். சிடி. அவர்கள் சென்னையில் தமது மனைவி பெயரில் கமலா தியேட்டரை நிறுவியிருக்கிறார்கள்.

— நடிகர் வினுசக்கரவர்த்தி

மணமக்கள் பல்லாண்டுகள் வாழ வாழ்த்துகிறேன்.

— நடிகர் பாண்டியன்

நானும் காதலித்துத் திருமணம் செய்து கொண்டவன் தான். மணமக்கள் எல்லாவகைச் செல்வங்களும் பெற்றுப் பல்லாண்டுகள் வாழ வாழ்த்துகிறேன்.

— நடிகர் ராமராஜன்

மணமக்கள் எங்களை மாதிரி அவசரமாக இரட்டைக் குழந்தைகளைப் பெற்றுக் கொள்ளாமல் நிதானமாக ஒவ்வொன்றாக குழந்தைகளைப் பெற்றுக் கொண்டு நல்வாழ்வு வாழ வாழ்த்துகிறேன்.

— நளினி ராமராஜன்

(மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலின் முன்னாள் தக்காரும் நமது இதழின் ஆசிரியருமான இராங்கியம் திரு வி. என். சிதம்பரம் செட்டியார் அவர்கள் புதல்வன செல்வன் நாகப்பன் - செல்வி கீதாவின் திருமண வாழ்த்தரங்கில் பேசியவை)

(அடுத்த இதழில் முடியும்)

காவல் துறை ஆணையாளருக்குப் பாராட்டு விழா

'மீனாட்சி திருமைந்தன்' திரு. வி. என். சிதம்பரம் செட்டியார் அவர்கள் தலைமையிலான மதுரை மக்கள் மன்றம், மதுரை காவல் துறை ஆணையாளர் திரு. கோ. செல்வராஜ் I. P. S. அவர்களுக்கு 8-7-90 ஞாயிறு காலை மதுரை ராஜா முத்தையா மன்றத்தில் ஒரு பாராட்டு விழாவை நடத்த உள்ளது.

இவ்விழாவில் திருமுருக கிருபானந்த வாரியார் பங்குபெற்று திரு செல்வராஜுக்கு நினைவுப் பரிசு வழங்கி ஆசியுரை வழங்கவிருக்கிறார்கள். பலர் வாழ்த்துரை வழங்கவிருக்கிறார்கள்.

இவ்விழாவில் திருமதி விஜயலெட்சுமி நவநீத கிருஷ்ணனின் கிராமியக் கலை நிகழ்ச்சியும் நடைபெற உள்ளது.

துலாவூர் அருகே வரவேற்பு வளைவு, நிழற்குடை!

குன்றக்குடி அருகில் உள்ள நகரத்தார் பெண்கள் குருபீடமாகிய துலாவூர் ஆதீனத்துக்குக் குன்றக்குடியிலிருந்து செல்லும் சாலையில் வரவேற்பு வளைவும் நிழற்குடையும் அமைக்கும் கால்கோள் விழா 4-6-90 அன்று கலாமடம் பாதரக்குடி ஆதீன கர்த்தர் தவத்திரு இரவீந்திர சுவாமிகள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. பொற்கிழிக் கவிஞர் திரு. அரு. சோமசுந்தரன் வரவேற்றார். துலாவூர் ஆதீன கர்த்தர் சிவத்திருஞானப்பிரகாச தேசிக சுவாமிகள் கால்கோள் செய்தார்கள். திரு இராம. ஏகப்பன், திரு. ஏஎல். எஸ். அழகப்பன், பொறியாளர் திரு. சுப்பிரமணியம் ஆகியோர் உரையாற்றினர். திரு. இராம. ஏகப்பன், திரு. ஏஎல். எஸ். அழகப்பன் முயற்சியில் இந்த வரவேற்பு வளைவும் நிழற்குடையும் அமைக்கப் பெறுகின்றன.

இராமேஸ்வரம்-காசி நடைப் பயணக் குழுவினருக்கு வரவேற்பு

திருத்தொண்டர் திரு ஆர். வயிரவன் தலைமையில் இராமேஸ்வரத்திலிருந்து நடைப் பயணமாக காசி சென்ற குழுவினர் தமது பயணத்தை வெற்றிகரமாக முடித்துக் கொண்டு 14-7-90 சனிக்கிழமை மதுரை திரும்புகின்றனர். அன்று மாலை அவர்களுக்கு மதுரை நகரத்தார் சங்கத்தின் சார்பாக நகரவிடுதியில் வரவேற்புக் கொடுக்கப்பெற உள்ளது.

'நானும் ஒரு நகரத்தார்'...

தமிழண்ணல்

7. திருந்தும் சமுகமா? திருந்தாத சமுகமா?

''நகரத்தார் சமுக முன்னேற்றத்திற்குத் தடை ஆச்சிமார்களே'' என ஒரு பட்டிமன்றம் நடத்தினால், நான் அதற்கு எதிர்த்தரப்பில்தான் வாதாடுவேன். ஏன், பயந்துபோய் என்றா நினைக்கிறீர்கள்? அன்று. ஆச்சிமார்களைவிட, அவர்களுக்கு ஒத்துப் பாடுகிற செட்டியார்கள்தான் மிகவும்.... சே! இது வேண்டாம். மேலும் பேசினால், தன்னைத்தானே தாழ்த்திக்கொள்வதாகிவிடும்.

ஆச்சியும் செட்டியாருமே பழமை விரும்பிகள் (Conservatives) இவர்கள் பழைய மரபை உடும்புபோல் பற்றிக்கொள்பவர்கள். ஆங்கிலேயர்களைப்போலப் பழமையில் ஒட்டிக்கொள்கிறவர்கள். இவர்களைத் திருத்தமுடியாது. திருத்தவே முடியாது என்பதன்று. காலத்திற்கேற்ப இவர்கள் தாமாக எப்படியோ திருந்துகிறார்கள். யார் சொல்லியும் திருந்தியதாக வரலாறில்லை!

ஃ ஃ ஃ

பேரறிஞர் சொ. முருகப்பா, தமிழ்க்கடல் ராய. சொ., கம்பனடிப்பொடி சா. கணேசன் போன்ற சமுகப் பெரியவர்களுடன் யான் நெருங்கிப் பேசிக்கொண்டிருந்த போதெல்லாம் "எவ்வளவோ முயன்றோம். எங்களால் ஒன்றுமே செய்ய முடியவில்லை" என்றுதான் அலுத்துப்போய், வெறுத்துப்

பேசினார்கள்.

ஆனாலும் இந்த சமூகம் மாறிக்கொண்டிருப்பதைப் பார்க்கிறேன். தானாகத் திருந்திக் கொண்டிருப்பதையும் கவனிக்கிறேன். அதனால்தான் 'போராட்டம் வேண்டாம்' என்று எழுதினேன். நம் இளைஞர் அணித் தலைவர் மதுரை பழ. இராமசாமி கோபப்படுகிறார். ''நகரத்தார் சமூகமே அழிந்துபோய் விடாதா'' என்று ஆதங்கப்படுகிறார். நம் இளைஞர்களின் சுறுசுறுப்பைக் கண்டு நான் மகிழ்ச்சியடைகிறேன். நகருக்கு நகர் நகரத்தார் சங்கங்கள் இருக்கவும் 'நகரத்தார் இளைஞர் சங்கங்கள்' தோன்றிவருகின்றன. இது நம் எழுச்சிக்கு அறிகுறி. பாராட்டுகிறேன். நம் இளைஞர்கள் போராட்டத்தில் குதித்தாலும் நான் தடுக்க விரும்பமாட்டேன். மாறாக, தேவைப் பட்டால் துணை நிற்பேன். ஏனென்றால், நம் அனைவருக்கும் ஒரே மாதிரிப்பட்ட பொதுக் கருத்து தான் ''இந்த இனம் - சமுகம் முன்னேற வேண்டும். அதற்கு ஆவன யாவும் செய்யவேண்டும்.''

ஃ ஃ ஃ

'எச்சில் இலை நாகரிகம்' பற்றி எழுதிவேன் காரைக்குடி மு. நா. நாராயணன் அதற்குச் சில கவிதைகளே யாத்துக் குரலில் வெளியிட்டிருந்ததைப் படித்தேன். மற்றும் பலர் யான் எழுதுவதையும், முனைவர் சுப. அண்ணாமலை அவர்கள் 'மணிவண்ணன் மடல்' எழுதுவதையும் படிக்கிறார்கள் என்றுதான் நம்புகிறேன். ஆயினும் உரத்த குரலில், சிந்தித்து எதிர்த்தும் காரண காரியத்தோடு ஆதரித்தும் எழுதுபவர்களை நான் போற்றுகிறேன். வெறுமனே 'நன்றாயிருந்தது, சிறப்பாக இருந்தது. பாராட்டும்படி இருந்தது' என்று மட்டும் எழுதுபவர்கள் முகமனுக்கு எழுதுபவர்கள். அவர்களைப் போற்ற என்மனம் இசையவில்லை.

இப்போதும், இதனைப் படிக்கும் அனைவரையும் அழைக்கிறேன், "வாருங்கள். விவாதிப்போம்", என்று. அஞ்சலட்டையில் நான்கு வரிகள் எழுதுங்களேன். சார்ந்தோ, எதிர்த்தோ காரண, காரியத்தோடு எழுதுங்கள். அவற்றை முன்கூட்டி நானும் படித்துப் பார்க்கிறேன். என் கட்டுரைகளில் விவாதிக்கிறேன்.

ஃ ஃ ஃ

மற்றொன்று, முன்கூட்டியே சிலயோசனைகள் சொல்ல விரும்புகிறேன். நம் நகரத்தார் இளைஞர் சங்கத்தினர்களும் மற்றும் அனைவரும் அந்தத் திசையில் பாடுபட முன் வருவார்களானால், பெரும் மகிழ்ச்சியடைவேன். அடுத்த இதழில் என் யோசனைகளை உங்கள் முன் வைக்கின்றேன்.

ஃ ஃ ஃ

மகிபாலன்பட்டி மு. சின்னய்யா செட்டியாரவர்கள், செட்டியார்கள் 'கிராப்பு' வைத்துக்கொள்ள வேண்டும் என்று போராட்டம் தொடங்கினார். செ. முருகப்பா. ராய. சொ. போன்ற இளைஞர்கள் அன்று அதை ஆதரித்து 'கிராப்பு' வைத்துக் கொண்டு செட்டி நாட்டில் 'புரட்சி' செய்தார்கள். முன்பெல்லாம் செட்டியார்கள் சிறுபிள்ளை முதல் தலையை மழுங்க மொட்டையடித்துக் கொண்டு, கழுத்தில் உருத்திராட்சம் கட்டிக் கொண்டு, திருநீற்றை நெற்றி நிறையப் பூசிக் கொண்டு இருந்தார்கள். இப்பொழுது சொன்னால் உங்களால் நம்ப முடிகிறதா? அழுத்திச் சொன்னால் மீசையை முறுக்குவீர்கள். அன்று

இதை நினைத்துப் பார்க்கவே முடியாத காலம். 'கிராப்பு வைக்கும்' போராட்டம், அன்று நடந்தபோது, வயதான பெரியவர்கள் எல்லாம் அதைக் கடுமையாக எதிர்த்தார்கள். ஆனால், உலகைப் பார்த்து, அவரவர் தாம்தாம் 'கிராப்பு' வைத்துக் கொள்ளத் தொடங்கி விட்டார்கள். இரண்டு' மூன்று தலைமுறைக்குப் பிறகு, இந்தத் தலைகீழ் மாற்றம், நம் 'தலை'யில் நடந்திருக்கிறது!

ஃ ஃ ஃ

இரண்டு தலைமுறைக்கு முன்னால், பெண் எடுக்கவேண்டுமென்றால், பெண்ணுக்கு முப்பதாயிரம் நாற்பதாயிரம் கொடுத்துத்தான் திருமணம் நடத்தியிருக்கிறார்கள். இதனால் ஐந்து பெண் பெற்றவர் அரசர் போல் மதிக்கப் பெற்றார். பல ஆண்கள் அன்று திருமணமின்றித் தவித்தார்கள்.

பெண்ணுக்கு ஆண்வீட்டார் பணம் கொடுக்க வேண்டும். பெண் வீட்டார் நூறு வராகன் பணமும் நூறு வராகனில் கழுத்துருவும்போடுவார்களாம் நூறு வராகன் பணம் முன்னூற்றைம்பது ரூபாய். பவுன் ஏழெட்டு ரூபாயாக இருந்தபோது, நூறு வராகனில் கழுத்துரு. பெரிய பணக்காரர் வீடு என்றால் இரு நூறு வராகன் பணம் (ரூ. 700). இருநூறு வராகனில் (பவுனில்) கழுத்துரு போடுவார்களாம். அந்தக் கழுத்துரு, பெண்ணின் கழுத்தையே இழுத்து வளைக்குமளவு பெர் தாக இருக்குமாம்.

ஆத்தங்குடி மு. சுப்பையா செட்டியாரவர்களுக்கு இப்போது 88 வயது. அவர்கள் சொன்ன பலவிவரங்கள் என்னைத் திகைக்க வைத்தன. அன்றைக்கு 'இவருக்குப் பத்தாயிரம் வராகன் தேறும் இருபதாயிரம் வராகன் தேறும்' என்று பேசிக் கொள்வார்களாம். அதாவது மிகப் பெரும் பணக்காரர்கள் எனப்படுபவர்கள் ரூபாய் முப்பத்தையாயிரம், எழுபதாயிரம் உடையவர்கள்! அவ்வளவுதான்! அன்றைக்குப் பணத்துக்கு இருந்த மதிப்பைப் பாருங்கள். இந்தச் சூழலில் ஓர் ஆண்மகன், ஒரு பெண்ணை மணந்து, இன்ப வாழ்வு வாழ வேண்டுமேல் குறைந்தது முப்பத்தையாயிரம் ரூபாய், பெண்ணைப் பெற்றவர்களுக்குப் பரிசமாகக் கொடுக்க வேண்டியிருந்தது. இதனால் 'ஆண் வர்க்கத்தைக்' காப்பாற்ற - ஆடவர்களின் கண்ணீரைத் துடைக்க சொ. முருகப்பா, ராய. சொ. போன்றவர்கள் நடத்திய போராட்டத்தைப் பற்றி ஆத்தங்குடி சுப. அவர்கள் என்னிடம் விவரித்ததைக் கேளுங்கள்.

(வளரும்)

நகரத்தாரில் ஒரு மிருதங்கக் கலைஞர்



நம்மினத்தில் ஒரு மிருதங்கக் கலைஞர்! ஆச்சரியமாக இல்லை? ஆச்சரியம் தான்; அதுவும் உண்மை தான்!

தன்னுடைய இளம் வயதில் கிராமஃபோன் ரிக்கார்டுகளில் எஸ். ஜி. கிட்டப்பா பாடிய பாடல்களைக் கேட்டு அப்படியே பாடினார் பள்ளி நாடகங்களில் நடித்தார்; பாடினார். பாட்டுப் போட்டிகளில் பரிசும் பெற்றார். ஆனாலும் மிருதங்கம் வாசிக்க ஆசைப்பட்டு மேசைகளில் தட்டிக் கொண்டே இருந்தார். அவர் ஆசை நிறைவேறியது. இன்று அவர் ஒரு மிருதங்கக் கலைஞர்! அவர் தான் பள்ளத்தூர் திரு. சித லெட்சுமணன் செட்டியார்.

பள்ளத்தூர் ராம. மு. லெ. சிதம்பரம் செட்டியார் - கருப்பாயி ஆச்சியின் புதல்வரான திரு. லெட்சுமணன் செட்டியார் வயிரவன் கோவில் பிள்ளையார் வகுப்பைச் சேர்ந்தவர். பள்ளி இறுதி வகுப்பு வரை படித்தவர். தற்போது சென்னை மைலாப்பூரில் வசித்து வரும் இவர், ராஜாசர் குடும்பத்தார் நிர்வகித்து வரும் சென்னை தமிழ் இசைச் சங்கத்தின் தமிழ் இசைக் கல்லூரியில் 1962 ஆம் ஆண்டு முதல் மிருதங்க ஆசிரியராகப் பணியாற்றி வருகிறார்.

திரு சித. லெட்சுமணன் செட்டியார் தன்னுடைய அனுபவங்களை "நகரத்தார் குரல்" வாசகர்களுக்கு எடுத்துரைத்தார்:-

பள்ளத்தூரில் கவிகுஞ்சரபாரதி பரம்பரையைச் சேர்ந்த

டாக்டர் முத்தையா என் தந்தையிடம் சொல்லி காரைக்குடி காத்தான் மலையப்ப அய்யரிடம் நான் மிருதங்கம் பயில ஏற்பாடு செய்தார். அது போல் நானும் 1942 முதல் 1944 ஆம் ஆண்டு வரை அவரிடம் கற்று என்னுடைய 14 ஆம் வயதிலேயே கச்சேரிகளில் மிருதங்கம் வாசிக்கலானேன். ஆனாலும் எங்கள் ஊர் பிரமுகர்கள் என்னை மேலும் உற்சாகப் படுத்தி அச்சமயம் திருச்சியிலிருந்த லயமேதை - காலஞ் சென்ற பழநி சுப்பிரமணிய பிள்ளை அவர்களிடம் மேலும் பயிற்சி பெற என்னைத் தூண்டினார்கள். பழநி பிள்ளைவாள் அவர்களிடம் குருகுலவாசம் செய்து 1944 முதல் 1954 ஆம் ஆண்டு வரை சிறந்த முறையில் பயிற்சி பெற்றேன். பழநி சுப்பிரமணியபிள்ளை அவர்கள் சிறந்த லயமேதை. அவர்களைப் போன்று மாணவர்களுக்குப் போதிக்கவும் மிருதங்கம் வாசிக்கவும் இனிமேல் யாரும் பிறந்துவர முடியாது. அவ்வாறான ஒரு சிறந்த கலைமேதையிடம் நான் சிஷ்யனாக இருந்ததைப் பெரும் பாக்கியமாகக் கருதுகிறேன்.

அவர் 1946 ஆம் ஆண்டு பள்ளத்தூர் சிவன் கோவிலில் செம்மங்குடி வைத்தியநாத பாகவதர் அவர்களின் பாட்டுக் கச்சேரியில் எனக்கு அரங்கேற்றம் செய்து வைத்தார். நான் என் குருநாதருடன் சேர்ந்து அரியக்குடி, ஜி. என். பி. மதுரை மணி அய்யர் போன்ற பல இசை மேதைகளின் கச்சேரிகளில் இரட்டை மிருதங்கங்களாக வாசித்தோம். இன்னும் சித்தூர் சுப்பிரமணிய பிள்ளை, எம். எம். தண்டபாணி தேசிகர், மதுரை சோமு, சீர்காழி எஸ். கோவிந்தராஜன் போன்ற பிரபலமானவர்களின் இசை நிகழ்ச்சிகளுக்கெல்லாம் பக்கவாத்தியம் வாசித்திருக்கிறேன். இன்னமும் பல இசை நிகழ்ச்சிகள் நடத்திக் கொண்டிருக்கிறேன். ஆனாலும் நம் நகரத்தார்களின் அன்றைய ஆதரவு எனக்கு இன்று இல்லை. அது எனக்கு ஒரு பெரிய குறையாகத் தெரிகிறது.

நம் செட்டிநாட்டில் அந்தக் காலத்தில் இசைக் கச்சேரி இல்லாமல் திருமணங்கள் நடைபெறாது. ஆனால் தற்சமயம் திருமணத்தை ஒரே நாளில் நடத்தி முடிக்க வேண்டிய கட்டாயம் இருப்பதால் இது போன்ற இசை நிகழ்ச்சிகள் நடத்தப் போதிய அவகாசம் இல்லை.

கோவில் திருவிழாக்களுக்கேற்ப பக்திப் பாடல் மெல்லிசை நிகழ்ச்சி நடத்த ஒரு குழுவை ஏற்படுத்தி நான் நடத்தி வருகிறேன். அவ்விதமாக வேணும் நம் நகரத்தார்கள் என்னை ஆதரித்தால் எனக்கு மனநிறைவு ஏற்படும்.

— இவ்வாறு அவர் கூறினார்.

அவரது முகவரி:
திரு. சித. லெட்சுமணன் செட்டியார்,
9 A காரணீஸ்வரர் பகோடா தெரு, மைலாப்பூர்
சென்னை-600 004.

திருமணம்

கீழச்சிவல்பட்டி கவிஞர் திரு. சிவல்புரி சிங்காரத்தின் சகோதரி செல்வி அழகம்மை என்ற மீனாட்சிக்கும் நாச்சியாபுரம் வி. ராம. பழநியப்ப செட்டியார் அவர்கள் புதல்வன் செல்வன் நாச்சியப்பன் என்ற ரெத்தினத்திற்கும் 8-6-90 அன்று வயிரவன்பட்டியில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

காவிரிப்பூம்பட்டினத்தில் பட்டினத்தடிகளின் அற்புதத் திருவிழா!

நாம் பிறந்த மண்ணுன காவிரிப்பூம்பட்டினத்தில் திருவெண்காடராகிய பட்டினத்தடிகளின் அற்புதத் திருவிழா, வழக்கம் போல் இந்த ஆண்டும் நடைபெற உள்ளது. பிரமோதூத ஆண்டு ஆடி மீ 11உ (27-7-90) முதல் ஆடி மீ 22 உ (7-8-90) வரை 12 நாட்கள் இத்திருவிழா கொண்டாடப்பட உள்ளது.

நிகழ்ச்சி விவரம்

27-7-90 வெள்ளி (1 ஆம் திருவிழா) திருவெண்காடர் திரு அவதாரம்.

28-7-90 சனி (2 ஆம் திருவிழா) திருவெண்காடர் திருவெண்காட்டிற்கு எழுந்தருளி சிவதீட்சை பெற்றுக் கொள்ளுதல்.

29-7-90 ஞாயிறு (3 ஆம் திருவிழா) திருவெண்காடர் முக்குள ஸ்நானம் திருக்கல்யாணம்.

30-7-90 திங்கள் (4 ஆம் திருவிழா) மருதவாணர் குழந்தையாக எழுந்தருளல். மருதவாணர் நிறைக்குப் பொன் நிறுத்துக் கொடுத்தல்.

31-7-90 செவ்வாய் (5 ஆம் திருவிழா) மருதவாணர் சப்பல் யாத்திரைக்குக் கடற்கரை செல்லல். துறவடைதல். சேந்தனுருக்கு விலங்கிடல்.

1-8-90 புதன் (6 ஆம் திருவிழா) பட்டினத்தடிகள் பிட்சைக்கெழுந்தருளல், அப்பம் அளித்தலும் வீடு தீப்பற்றுதலும்

2-8-90 வியாழன் (7 ஆம் திருவிழா) ஞானகலாம்பிகை பரிபூரணமடைதல். சுவாமியும் அம்மனும் இடபாரூடராய் எழுந்தருளி மோட்சம் கொடுத்தல்.

3-8-90 வெள்ளி (8 ஆம் திருவிழா) திருவாரூர்ப் பிள்ளையைப் பிழைப்பித்தல்; இரவு சமுமரம் எரித்தல்.

4-8-90 சனி (9 ஆம் திருவிழா) பத்திரகிரியாரும் நாயடியாரும் அடிகள் அருளால் மோட்சமடைதல். தங்கப் பேய்க் கரும்பு தாங்குதல்.

5-8-90 ஞாயிறு (10 ஆம் திருவிழா) பட்டினத்தடிகள் குருபூஜை. சேந்தனுர் விலங்குதெறித்தல், ருத்ராபிஷேகம். இரவு பஞ்சமூர்த்திகளும் பட்டினத்தடிகளும் திருவீதி வருதல்.

6-8-90 திங்கள் (11 ஆம் திருவிழா) பஞ்சமூர்த்திகளும் திருவெண்காடரும் இடபவாகனக் காட்சியுடன் கடற்கரைக்கு எழுந்தருளி தீர்த்தங் கொடுத்தல்.

7-8-90 செவ்வாய் (12 ஆம் திருவிழா) ருத்ராபிஷேகமும் விடையாற்றியும்.

(3-8-90 வெள்ளியன்று மாலை திருவிளக்குப் பூஜை நடைபெற உள்ளது.)

ஒற்றுமை அவசியம்

நம்மில் தொழில் செய்து நட்டம் அடைந்தவர்களுக்கு பிற சமூகத்தினரைப் போல நாமும் நம்மால் முடிந்த எல்லா உதவிகளையும் செய்து கொடுத்து அவர்களது கஷ்டத்தைப் போக்க வேண்டும். அதற்கு நம்மிடையே ஒற்றுமை அவசியம்.

— பேராசிரியை
மீனாள் கற்பக கணபதி

(வேலூரில் பாங்க் ஆப் மதுரையின் தலைவர் திரு. சுப. சபாபதிக்கு 3-6-90 அன்று நடைபெற்ற பாராட்டு விழாவில்)



7. வரதட்சிணைப் பிரச்சினை: சில ஆலோசனைகள்!

அன்புள்ள அண்ணனுக்கு,

வரதட்சிணைப் பிரச்சினை மிகுதியாகப் பாதித்தது பெண்களையே என்று, சென்ற மடலில் எழுதியிருந்தேன். கன்னிப்பெண்களைக் கண்ணீர் விட வைப்பது சமுதாய நீதி அல்ல. ஒரு இலட்சம், ஒன்றரை இலட்சம் என்று நாளுக்கு நாள் ஏறிக் கொண்டே செல்லும் வரதட்சிணைச் சக்கரம், தனது பாதையில் திருமணம் ஆக முடியாத பெண்களின் எண்ணிக்கையை மிகுதிப்படுத்திக் கொண்டே செல்கின்றது. இயற்கையின் உந்துதலை - கட்டாயங்களை - யார் மீறமுடியும்? வாய்க்கால் வழியே ஓட முடியாவிட்டால், கரையை ஓரிடத்தில் அறுத்துக் கொண்டு தண்ணீர் வெளியேறவே செய்யும். நம் சமூகப் பெண்கள் தமக்கு விருப்பமானவரோடு வெளியேறிப் பதிவுத் திருமணம் செய்து கொள்வர். ஆங்காங்கு ஒழுக்கக் கேடுகளும் நடைபெறக் கூடும்.

இந்த நிலை ஏற்படுவதைப் பார்த்துக் கொண்டிருக்கப் போகிறோமா? வருமுன் காப்பது போல், சில நடவடிக்கைகளை மேற்கொண்டு, இந்த அவமானத்தைத் தவிர்ப்பதன்றோ அறிவுடைமை? ''வரு முன்னர்க் காவாதான் வாழ்க்கை, எரி - முன்னர் வைத்தூறு போலக் கெடும்'' என்பது குறள் தரும் எச்சரிக்கை.

நான் இங்கு 'நடவடிக்கை'


என்று குறிப்பிடுவது, நமது சமூக அளவில், சமூகத்தாரின் ஒட்டு மொத்த முயற்சியாக, மேற் கொள்ள வேண்டியதாகும். தனிப் பட்டவரோ, ஒரு பங்காளி வகையரோ இதைச் செய்ய முடியாது.

நான் சொல்வதற்காக, அண்ணன், நீங்கள் வருத்தப்படக் கூடாது. நமக்குப் பொதுவாக, சமூக உணர்வு குறைவு. முன்பு நம் சமூகத்தில் நல்ல கட்டுப்பாடு இருந்தது. ஆனால் இப்பொழுது அவ்வாறு இல்லை. கோவிலூரில் கூடும் 96 ஊர்க் கூட்டங்களில் செய்யப்படும் முடிவுகள் கூட, ஒழுங்காகப் பின்பற்றப்படுவதில்லை. இந்த நிலையில், நம் சமூகத்தில் நடந்துவரும் வரதட்சிணைச் சந்தையால் உண்டாகியுள்ள தீமைகளை, இனிமேலும் நடக்காமல் தடுக்க வேண்டிய அவசியத்தை உணருகின்றோம். நம் சமூகத்தைக் கட்டுப்படுத்தக் கூடிய தலைமை, அல்லது அமைப்பு ஒன்று இல்லையே என்று ஏங்கும் நிலை உள்ளது.

என் ஆலோசனைகள் சிலவற்றைக் கீழே தருகின்றேன். இவற்றைச் சிந்தித்துப் பாருங்கள்:

ஒவ்வொரு ஊரிலும் உள்ள கோயில் பிரிவுகளைச் (ஒன்பது கோயில்) சேர்ந்த நகரத்தாரின் பிரதிநிதிகள் அந்தந்த ஊர் 'நகரக் கோவிலிலோ' வேறு பொது இடத்திலோ கூட வேண்டும். இந்தக் கூட்டத்தை ஊர்க் கோயில் டிரஸ்டிகள் கூட்டலாம். அதில் கீழ்க்கண்ட யோசனைகளை விவாதத்திற்கு வைக்கலாம்.

1) வரதட்சிணை தொடர்பாக உருவாகிவிட்ட 'மார்க்கெட்' உடனடியாக நிறுத்தப்



நெற்குப்பையைச் சேர்ந்த இராம. பெரியகருப்பன் எல்கிற முனைவர் தமிழண்ணல் அவர்களின் புதல்வி செல்வி முத்துமீனாள் B.A. க்கும் நெற்குப்பை ராம. சா. கரு. கரு. சுப்பையா செட்டியார் அவர்கள் புதல்வன் செல்வன் பழநியப்பன் B. Com. க்கும் நெற்குப்பையில் 28-5-90 அன்று திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

பட வேண்டும். அது எங்கு போய் நிற்கும் என்பது தெரியவில்லை. இதற்கு வழி:- வரதட்சிணை, சீதனம் - இரண்டிற்கும் வரையறை - மேல் எல்லை (Maximum) முடிவு செய்யப்பட வேண்டும். இதற்கு நம் முன்னோர்கள் வழிகாட்டியுள்ளார்கள் வரதட்சிணையை ''உகந்துடைமை'' என்று குறிப்பிட்டிருக்கின்றார்கள். இன்று அது ''கசந்துடைமை'' யாகப் போய் விட்டது நமது இசைகுடிமானத்தில் இந்த வரதட்சிணையை அவர்கள் வரையறுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அது மிகவும் கொஞ்சத் தொகைதான். வேடிக்கை என்னவென்றால், இன்றும் அதே வாசகத்தை அச்சிட்டு வைத்துக் கொண்டு, ஒரு சடங்கு போலச் சம்பந்திகள் இருவரும் கையெழுத்திடுகின்றோம். நாம கொடுக்கின்ற தொகை, பல மடங்கு அதிகமாகி விட்டது.

இசைகுடிமானத்தில் உள்ள தொகையை இப்பொழுது கொடுக்கலாம் என்று நான் சொல்லவில்லை. நம் முன்னோர் ஒரு கட்டுப்பாட்டை - ஒரு வரையறையை - நிர்ணயம் செய்திருக்கின்றார்கள்; அதை நாம் பின்பற்றலாம் என்று சொல்ல விரும்புகின்றேன். இக்கால நிலைக்கு ஏற்ப நாமும் ஒரு தொகையையும் நகை எண்ணிக்கையையும் நிர்ணயம் செய்யலாம். எல்லாருக்கும் இயலக்கூடிய வகையில் நிர்ணயம் செய்ய வேண்டும்.

வரதட்சிணை 1 வராகன்: சீதனம் 1 வராகன் என்று தீர்மானம் செய்ய வேண்டும். முறை தலைச் சிட்டை, வருஷத்து முறைகள் - என்பவை எல்லாம் கூடாது. நகைகள்: மாப்பிள்ளைக்குக் கேட்கக்கூடாது. பெண்ணுக்கு திருமங்கல நாண், காப்பு, தோடு மட்டும் செய்தால்

போதும். திருமங்கலநாண் என்ற பெயரைக் கவனியுங்கள். நாண் என்பது கயிறு. மஞ்சட் கயிறும் அதில் கோக்கப்படும் திருமாங்கலியமும் தாம் முக்கியம். கயிற்றுக்குப் பதிலாகச் சங்கிலி 5 பவுனில் செய்வது தேவையில்லை. சாமான்கள் பரப்பக் கூடாது. குடும்பத்திற்குத் தேவையான சாமான்கள் மட்டும் கொடுத்தால் போதும்.


வரதட்சிணைத் தொகை மிகுதியாக வாங்கி, மாப்பிள்ளை வீட்டார், 8, 10 என்று பட்டுச் சேலை வாங்குகிறார்கள். இதில் பெருந்தொகை செலவாகின்றது. மருமகள் பட்டுச் சேலையை எப்போதோ ஒரு முறைதான் அணிகிறாள். இக்காலத்துப் பெண்கள் வாயல், டெரிகாட் சேலைகளைத்தான் விரும்புகிறார்கள். அவற்றை மாப்பிள்ளை வீட்டார் வாங்கிக் கொடுக்கலாம்.

அடுத்து, திருமண நிகழ்ச்சி. இதுபற்றி என் யோசனைகளை அடுத்த மடலில் தருவேன்

அன்புள்ள

மணிவண்ணன்

நினைவஞ்சலி



தோற்றம் :
16—6—1893

மறைவு :
29—7—1974

எங்கள் வங்கியின் நிறுவனர் 'கலைத் தந்தை'

கருமுத்து தியாகராசச் செட்டியார்

சந்தனத்தை வென்ற நிறம்
  சாந்தத்தைக் கொண்ட முகம்
வந்தனத்தை ஏற்கும் உரு
  வண்டமிழைப் பேசும் வாய்
வெண்ணீற்றின் திருநெற்றி
  விளங்குசிறு பொட்டழகு
கண்ணீற்றில் கருணைமழை
  கணக்கதனில் மாமேதை
சைவத்தை நினையுநெஞ்சு
  சால்பிற்கோ துணையிருப்பு
சைவத்தை கல்விக்கும்
  கண்வைத்த ஆலைக்கும்
நிலைவைத்த உயிராவான்
  நித்தம்வளர் மெய்யாவான்
சிலைவைத்து வணங்குகவே
  சீராளன் கருமுத்துத்
தியாகச் செம்மலோன்தன்
  திருவடியே சிந்திப்போம்
நியமமாய்ப் பூசிப்போம்
  நித்தம்நாம் ஏத்திடுவோம்

— பேராசிரியர் முனைவர்
வெ. சு. அழகப்பன்

காசி சத்திரத்திற்கு காரைக்குடியில் புதிய கட்டிடம்

ஸ்ரீ காசி நாட்டுக்கோட்டை நகரச் சத்திர மேலாண்மைக் கழகத்தின் சார்பில் காரைக்குடி சிவன் கோவில் அருகில் கிணற்றடி காளியம்மன் கோவில் எதிரில் ஒரு புதிய கட்டிடம் கட்டப்பெற்று வருகிறது. இங்கு நகரத்தார்கள் வந்து போய் தங்குவதற்கு ஏற்ற வகையில் தங்கும் அறைகள், குளியல் அறைகள், கழிவறைகள் மற்றும் பொருட்களை வைத்துப் பூட்டிக்கொள்ளும் வகையில் அனைத்து வசதிகளும் செய்யப்பட்டு வருவதாகவும் இப்புதிய கட்டிடத்தின் திறப்பு விழா ஆவணியில் நிகழவிருப்பதாகவும் இதன் மூலம் 'காரைக்குடியில் நகரவிடுதி இல்லை' என்ற குறை தீருமென்றும் மேற்படி காசி நகரச் சத்திரத்தின் செயலாளர் கோனாபட்டு இராம. முத்தழகப்ப செட்டியார் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

எஸ்வி. ராஜாராம் தாயகம் திரும்பினார்

தேவகோட்டையைச் சேர்ந்த மு. சிவலிங்கம் செட்டியார் அவர்களின் மூத்த புதல்வரும் சென்னை R. R. Exports, Indu Exports நிறுவனங்களின் பங்குதாரருமான திரு. SV. ராஜாராம் தன்னுடைய தொழில் பங்குதாரர் திரு. ராபர்ட்டுடன் சென்னையி



லிருந்து 25-3-90 அன்று புறப்பட்டு பாரிஸ், அமெரிக்கா, ஜெர்மன், பெல்ஜியம் ஆகிய நாடுகளுக்கு வியாபார முன்னேற்றம் சம்பந்தமாக பயணம் செய்து மஸ்கெட், பம்பாய் வழியாக 28-4-90 அன்று நலமாகத் தாயகம் திரும்பினார்.

— Advt.

பழ. முத்தப்பனுக்கு தமிழாகரர் பட்டம்!

மேலைச்சிவபுரி கணேசர் செந்தமிழ்க் கல்லூரி முதல்வர் முனைவர் பழ. முத்தப்பன் அவர்



களுக்கு குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம் தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் 6-6-90 வைகாசி விசாகத்தன்று குன்றக்குடியில் நடைபெற்ற விழாவில் 'தமிழாகரர்' என்னும் பட்டமும் பொற்பதக்கமும் அளித்து பொன்னாடை அணிவித்துச் சிறப்புச் செய்தார்கள்.

குரோம்பேட்டை நகரத்தார் சங்கம் நடத்தி வைத்த திருமணம்

இராங்கியம் எஸ். எம். பழநியப்ப செட்டியார் அவர்களைத் தலைவராகக் கொண்ட சென்னை குரோம்பேட்டை நகரத்தார் சங்கம் சென்னையில் நம் சமூகத்தைச் சேர்ந்த ஒரு இணைக்கு திருமணத்தை நடத்தி வைத்துள்ளது.

சென்னை குரோம்பேட்டையில் 3.6.90 ஞாயிறன்று குழிபிறை இராம. பழநியப்ப செட்டியார் அவர்கள் புதல்வன் செல்வன் முருகவேள் என்கிற சண்முகத்திற்கும் அலவாக்கோட்டை நாக. சிதம்பரம் செட்டியார் அவர்கள் புதல்வி செல்வி தெய்வானை என்கிற சுகந்திக்கும் மேற்படி திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

இத்திருமணத்திற்கு மணமகன், மணமகளின் உறவினர்களும் குரோம்பேட்டை சங்கத்தின் நிர்வாகிகள், உறுப்பினர்களும் திரளாக வந்திருந்து சிறப்பித்தனர்.

மேற்படி திருமணத்தையொட்டி திரு. பழ. அண்ணாமலை தலைமையில் வாழ்த்தரங்கம் நடைபெற்றது. செயலாளர் திரு. வீர. வீரப்பன் நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கினார். மற்றொரு செயலாளர் திரு. சேது லெட்சுமணன் வரவேற்றுப் பேசினார். திருமதி சேவு. கல்யாணி திருவாளர்கள் எல் செல்லப்பன் எல். மெய்யப்பன் டாக்டர் நாகப்பா நாச்சியப்பன் வாழ்த்துரை வழங்கினர். தலைவர் திரு. எஸ். எம். பழநியப்ப செட்டியார் நன்றி கூறினார்.

இச்சங்கம் தொடங்கப்பெற்று மூன்றரை மாதங்களுக்குள் இத்திருமணத்தை நடத்தி வைத்திருப்பது பாராட்டுக்குரியது.

பம்பாயில் பாராட்டு விழா

பம்பாய் நகரத்தார்கள் சார்பாக பாங்க் ஆப் மதுரையின் தலைவர் திரு. சுப. சபாபதிக்கு பம்பாயில் 27-5-90 அன்று பாராட்டு விழாச் சிறப்பாக நடைபெற்றது. விழாவிற்கு திரு. கே. எம். வெங்கிடாசலம் தலைமை ஏற்றார்.

திருவாளர்கள் ரெ. மெய்யப்பன், டாக்டர் எஸ். வைத்தியநாதன், எம். பழனியப்பன், என். லெட்சுமணன், எஸ். சோமசுந்தரம் கே. ஆர். அருணாசலம், எஸ். எஸ். ராதா ஆர். எம். முத்துக்கருப்பன் ஆகியோர் பாராட்டுரை நல்கினர். திரு கே. எம். வெங்கிடாசலம் நினைவுப் பரிசு வழங்கிச் சிறப்பித்தார். விழா ஏற்பாடுகளை திரு. வி. ஆண்டியப்பன் சிறப்பாகச் செய்திருந்தார்.

திருஞானசம்பந்தர் குருபூஜை

தேவகோட்டையில் காட்டுத் தண்ணீர்ப் பந்தலில் 9-6-90 அன்று திருஞானசம்பந்தர் குருபூசை மிகச்சிறப்பாக நடைபெற்றது. அப்பொழுது நிகழ்ந்த கவியரங்கிற்கு காசிஸ்ரீ திரு. அரு. சோமசுந்தரன் தலைமை தாங்கினார். கவிஞர்கள் மீனவன், கா. நாகப்பன், சேது அருணாசலம், டாக்டர் சபா. அருணாசலம், அரு. சுந்தரம் முத்தழகம்மை, புனிதவதி சிவபூசகர் குப. சொக்கலிங்கம் ஆகியோர் கவி பாடினர். குழந்தைகள் கவியரங்கம் மங்கையர்க்கரசி மீனாட்சி தலைமையில் நடைபெற்றது, குழந்தைகள் மணிகண்டன், லெட்சுமணன், சோலையப்பன், அங்கயற்கண்ணி, கார்த்திக் ஆகியோர் கவிபாடினர்.



செய்திகள் வாசிப்பவர்...

எல். சுந்தரம்

ஃ நகரக் கோயில்களில் ஒன்ருன இரணியூர்க் கோயிலின் திருக்குட நன்னீராடடு விழா 5-7-90 (ஆனி மீ 21 உ) அன்று சிறப்பாக நடைபெற்றது.

ஃ முத்தூர் வாணியங்குடி அடைக்கலம்காத்த அம்மன் கோயிலின் மண்டலாபிஷேக விழா 28-6-90 வியாழனன்று சிறப்பாக நடைபெற்றது.

ஃ இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் பொது மேலாளராகப் பதவி உயர்வு பெற்றுள்ள திரு. வீர. வீரப்பனுக்கு 26-6-90 அன்று தேவகோட்டையில் அள. அரு. சுப்பையா செட்டியார் அவர்கள் தலைமையில் பாராட்டு விழா நடைபெற்றது.

ஃ சொக்கலிங்கம் புதூர் நகரச் சிவன் கோயிலின் 71 ஆம் ஆண்டு வருடாபிடேக விழா 2-7-90 அன்று சிறப்பாக நடைபெற்றது.

ஃ மதுரை மீனுட்சி அம்மன் திருக்கோவில் தெற்காடி வீதியில் உள்ள நா. சா. தேவாரப் பாடசாலையில் சுக்கில ஞு கார்த்திகை மீ முதல் வியாழன் தோறும் தேவாரத் திருப்பதிகங்களுக்கு கவிஞர் திரு இராகவன்முத்து விரிவுரை வழங்கி வருகிருர்.

ஃ திருச்சி பாரதிதாசன் பல்கலைக் கழகத்தில் 6-5-90 அன்று நடைபெற்ற பாவேந்தர் பாரதிதாசன் நூற்ருண்டு விழாவில், பாரதிதாசன் நூல்களை முதன் முதலில் பதிப்பித்து வெளியிட்ட முல்லை முத்தையா அவர்களுக்குத் தமிழக முதல்வர் மாண்புமிகு மு. கருணுநிதி அவர்கள் ரூ. 10,000 பரிசும் கேடயமும் வழங்கி பட்டாடை அணிவித்துப் பெருமைப் படுத்தினுர்கள்.

ஃ தேவகோட்டை பிரவசன சபா சார்பாக தேவகோட்டை நகரச் சிவன் கோவிலில் 6-7-90 முதல் 15-7-90 முடிய (இரவு 7 மணி முதல் 9 மணி வரை) திருமுருக கிருபானந்தவாரியார் ''கந்தர் அலங்காரம்'' என்ற தலைப்பில் பேருரையாற்றவிருக்கிருர்கள்.

ஃ தேனிமலை அருள்மிகு சுப்பையா செல்வவிநாயகர் ஆலய திருக்குட நன்னீராட்டு விழா 4-6-90 அன்று நடைபெற்றது.

ஃ திருச்சி நகரத்தார் சங்கத்தின் சார்பில் மதுரை வங்கியின் தலைவர் திரு. சுப. சபாபதிக்கு 9-6-90 அன்று திருச்சியில் பாராட்டு விழா நடைபெற்றது.

ஃ ஜூன்' 90 ''நகரத்தார் குரல்'' இதழின் முன் அட்டையில் வெளியிடப் பெற்ற திருமணஞ்சேரி சுவாமி, அம்மன் படத்தை கண்டனூரைச் சேர்ந்த அன்பு திரு. என். சிதம்பரம் நமக்கு அன்பளிப்பாக வழங்கினுர்.

ஃ உங்கள் கைகளில் தவழும் இதழ் ''நகரத்தார் குர''லின் 102 ஆவது இதழாகும்.



கடியாபட்டி விஸ்வநாதபுரம் வயி. இராமசாமிச் செட்டியார் - திருமதி இராம. சின்னம்மாள் ஆச்சியின் 60 ஆம் ஆண்டு நிறைவு மணிவிழா 11-5-90 அன்று கடியாபட்டி விஸ்வநாதபுரத்தில் சிறப்பாக நடைபெற்றது.

திரு. மு. அ. சிதம்பரம் செட்டியார் திரு. ஏ. சி. முத்தையா திரு. சி. வி. சிடி. வி சிதம்பரம் ஆகியோர் குடும்பத்துடன் கலந்து கொண்டனர். திருமுருக கிருபானந்தவாரியார் ஆசி கூறி வாழ்த்து அனுப்பியிருந்தார். மணிவிழாவில் திரு. முரு பழ. இரத்தினம் செட்டியார் வாழ்த்திப் பேசினார்.

மதுரையில் நகரத்தார் கலந்துரையாடல் கூட்டம்

மதுரை நகரத்தார் சங்கத்தின் சார்பில் ராஜா முத்தையா மன்றத்தில் 1-5-90 தொழிலாளர் தினத்தன்று மாலையில் நகரத்தார்கள் கலந்துரையாடல் கூட்டம் சிறப்பாக நடைபெற்றது.

சங்கத்தின் தலைவர் தொழிலதிபர் திரு. லெ. நாராயணன் செட்டியார் அவர்கள் தலைமையேற்று உரையாற்றினார்கள்.

இவ்விழாவில் ''நகரத்தார் முன்னேற்றத்திற்குப் பெரிதும் காரணம் ஆச்சிமார்களே, செட்டியார்களே'' என்ற தலைப்பில் பட்டிமண்டபம் நடைபெற்றது. 'ஆச்சிமார்களே' என்று பொற்கிழிக் கவிஞர் திரு சொ சொ. மீ. சுந்தரம், பேராசிரியைகள் திருமதி சி. எஸ். விசாலாட்சி திருமதி சுலோசனா சேவுகன் செட்டி ஆகியோரும் 'செட்டியார்களே' என்று 'முத்தமிழ் மணி' திரு கதி. சுந்தரம் பேராசிரியர் திரு. தேவ. நா. வெங்கடாசலம் பேராசிரியர் டாக்டர் திரு. ந. மாணிக்கம் ஆகியோரும் வாதாடினர். நடுவர் தமிழாரகர் முனைவர் சுப. அண்ணாமலை அவர்கள் நகரத்தார் முன்னேற்றத்திற்கு இரண்டு கண்களைப் போலத் திகழும் இருவருமே காரணம் என்று தீர்ப்பு வழங்கினார்கள்.

மதுரை நகர விடுதிக்கு புதிதாகக் கட்டப்பெறவிருக்கும் கட்டிடத் திருப்பணிக்கு ஒவ்வொருவரும் குறைந்தது ரூ. 101-00 வீதம் நன்கொடை அளித்து உதவ வேண்டுமெனக் கூட்டத்தில கேட்டுக்கொள்ளப்பெற்றது. பலர் நன்கொடை வழங்கினர்.

இவ்விழாவிற்கான செலவை சங்கத் தலைவர் லெ நா. அவர்களும நாகப்பா சைக்கிள் மார்ட் அதிபர் திரு. இராம. முத்தழகப்ப செட்டியார் அவர்களும் கலைமகள் இராம. நடராஜன் செட்டியார் அவர்களும் மனமுவந்து ஏற்றுக்கொண்டார்கள்.

சொக்கநாதபுரத்தில் இலவச மருத்துவமனை

பாகனேரி இராம. முத்துப் பழநியப்ப செட்டியார் அவர்களுக்குச் சொந்தமான 'முத்துப் பழநியப்ப செட்டியார் - கண்ணாத்தாள் ஆச்சி பப்ளிக் சாரிட்டபிள் டிரஸ்ட்' என்ற அறக்கட்டளையிலிருந்து நிதி உதவி பெற்று சொக்கநாதபுரத்தில் 'சோழபுரம் இராமசாமிச் செட்டியார் - கண்ணம்மை ஆச்சி நினைவு இலவச மருத்துவமனை' என்ற பெயரில் ஒரு இலவச மருத்துவ மனை 13-6-90 முதல் இயங்கி வருகிறது.

டாக்டர் எஸ் சண்முகம் செட்டியார் அவர்கள் தலைமை யேற்க அவர்களது துணைவியார் திருமதி நாச்சம்மை ஆச்சி திருவிளக்கேற்றிவைக்க 13-6-90 மாலை 5 மணி அளவில் மேற்படி இலவச மருத்துவமனை திறந்து வைக்கப் பெற்றுள்ளது.

மேற்படி இலவச மருத்துவ மனைக்கு டாக்டர் ஏ. பெருமாள் அவர்கள் தினசரி மாலை 5-00 மணி முதல் 7-00 மணி வரை வந்து சேவை செய்ய ஒப்புக் கொண்டிருப்பதாகவும் சொக்கநாதபுரம் மற்றும் சுற்று வட்டார மக்கள் ஒத்துழைப்புக் கொடுப்பதுடன் அவரது அரிய சேவையைப் பயன் படுத்திக் கொள்ளுமாறும் சில்வர் லாண்ட்ஸ் திரு. பழ. பழநியப்பன் கேட்டுக் கொண்டுள்ளார். இந்த மருத்துவ மனையை இதே பெயரில் ஆரம்ப சுகாதார நிலையமாக உருவாக்க முயற்சிகள் மேற்கொள்ளப் பெற்று வருவதாகவும் அவர் தெரிவித்தார்.



வேந்தன்பட்டி வெ. அழ சிதம்பரம் செட்டியார் அவர்கள் புதல்வி செல்வி இராமாயி என்ற கலாவதிக்கும் செவ்வூர் சே. கரு. ராம. சேக்கப்ப செட்டியார் அவர்கள் புதல்வன் செல்வன் சுப்பிரமணியன் B Sc க்கும் 4-6-90 அன்று வேந்தன்பட்டியில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

மரகதவல்லியைப் பாராட்டுகிறோம்

படத்தில் காணும் மாணவி மரகதவல்லி கடந்த மார்ச் '90ல் நடைபெற்ற பிளஸ் டு பொதுத் தேர்வில் ஆங்கிலப் பாடத்தில் (Advanced English) 200க்கு 173 மதிப்பெண்கள் பெற்று மாநில அளவில் மூன்றாவது இடத்தில் தேர்ச்சி பெற்றுள்ளார்.

சென்னை சாந்தோமில் உள்ள ரோசரி மெட்ரிகுலேஷன் பள்ளி மாணவியான மரகதவல்லி, தனது வெற்றிக்கு மூல காரணம் தனது பள்ளி அளித்த கனிவான, கடுமையான கல்விப் பயிற்சி தான் என்கிறார்.



"இந்த வெற்றி நான் எதிர் பார்த்தது தான். ஆனால் மாநில அளவிலான வெற்றியை எதிர் பார்க்கவில்லை. என்னைத் தினமும் அதிகாலையில் எழுப்பி ஊக்குவித்து படிக்கச் செய்த என் அம்மாவுக்கும் பள்ளி ஆசிரியை திருமதி ஜார்ஜுக்கும் இந்த வெற்றியைக் காணிக்கையாக்குகிறேன். என் குடும்பத்தார் மகிழும்படியாக நான் இச்சிறப்பைப் பெற்றுள்ளது என் வாழ்க்கையில் மறக்க முடியாத சாதனை" என்று அவர் கூறினார்.

தனக்கு ஆங்கில இலக்கியத்தில் ஈடுபாடு அதிகமிருப்பதாகவும் எனவே ஆங்கில இலக்கியம் படிக்கத் திட்டமிட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

மாணவி மரகதவல்லி, தேவகோட்டை கல்வி வள்ளல் என அழைக்கப் பெறுபவரும் தேவகோட்டை ஸ்ரீ சேவுகன் அண்ணாமலைக் கல்லூரி நிறுவனருமான உ. ராம. மெ. சுப. சேவு. அண. அண்ணாமலைச் செட்டியார் அவர்களின் பேத்தி ஆவார். இவரது தந்தையார் திரு. அண. திருநாவுக்கரசு செட்டியார்; தாயார் சீதாலட்சுமி ஆச்சி. தந்தையார் மலேசியாவில் சொந்தமாகத் தொழில் செய்து வருகிறார்.

மரகதவல்லிக்கு புறச் சூழ்நிலை மட்டுமல்லாது முன்னோரிடமிருந்து பெற்ற பாரம்பரிய குணங்களும் நல்ல ஒத்துழைப்பைத் தந்திருக்கும் போலும்!

மரகதவல்லிக்கு நமது நல்வாழ்த்துக்களையும் பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

பல மொழிகளையும் ஆராய்ந்து வருபவர்

பல்மொழிச் செல்வர் சாத்தூர் சேகரன் என்பவர் தொன்மை வாய்ந்த நம் தமிழ் மொழியையும், உலக நாடுகளில் பேசும் மற்ற மொழிகளையும் ஆராய்ந்து, அவற்றுக்கு உள்ள தொடர்பை, தோற்றத்தை அறிந்து கூறுகிறார். இலக்கண பூர்வமாகவும், விதிமுறைப்படியும் அவர் சுமார் 200 மொழிகளில் ஆய்வு நடத்தியுள்ளார். உலக மொழிகளில் சுமார் 120 வரை அவர் அறிந்துள்ளார். இவருடைய ஆய்வுக் கட்டுரைகள் உலகத்தமிழ் மாநாடுகளிலும் பல்வேறு பல்கலைக் கழகங்களிலும் சமர்ப்பிக்கப்பட்டு அறிஞர்களால் விமர்சிக்கப்பட்டுள்ளன. பாராட்டுகளையும் பெற்றுள்ளன.

—மேலைச்சிவபுரி முத்துராமன்

ஆதாரம்: மஞ்சரி

கலைத் தந்தை

முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம்

கலைத் தந்தை:

தமிழகத்தில் எத்தனையோ மக்கள் பிறந்தார்கள்; வாழ்ந்தார்கள்; மறைந்தார்கள். அவர்களில் 'கலைத்தந்தை' என்று அன்பொடு அனைவராலும் புகழ் பெற்று வாழ்நத ஒரே தமிழ் மகன் கருமுத்து.

கருமுத்து:

கரு - பாட்டனின் பெயர்; முத்து - தந்தையின் பெயர். இவ்விருவர் பெயராலும் அழைககப் பெற்றவரே நம் தியாகராசர். அவர் பெயர் கருப்பு; நிறம் சிவப்பு; புகழ் வெளுப்பு; உள்ளம் பச்சைக் குழந்தை உள்ளம்.

நகரத்தார்:


தமிழகத்தில் சைவத்தையும் தமிழையும் வளர்த்து கோவில் கட்டி குடமுழுக்குச் செய்து, அற நிலையங்கள் வைத்து அறப்பணிகள் பல புரிந்த அருப்பெரும் சமூகம் நகரத்தார் சமூகம். இச் சமூகத்தைத் தாங்கி நின்ற தலை சிறந்த பெருஞ்செல்வர் மூவரில் ஒருவர் நம் தியாகராசர். மற்றைய இருவர் செட்டிநாட்டரசர் ராஜா. சர். அண்ணாமலைச் செட்டியார்; கோடி கொடுத்தும் குடியிருந்த வீடும்கொடுத்த கொடை வள்ளல் கோட்டையூர் அழகப்பச் செட்டியார் அவர்களும் ஆவர். இம் முப்பெருந் தலைவர்களையும் நகரத்தார் சமூகம் மட்டுமல்ல; தமிழகமே என்றும் மறவாது.

தியாகராசர்:

ஆ. தெக்கூரில் 1893ல் பிறந்தார். எனக்கு ஐந்து வயது மூப்பு. எனக்கும் அவருக்கும் தொடர்பு ஏற்பட்டு 60 ஆண்டுகள் ஆயின. எங்கள் இருவரையும் அறிமுகப் படுத்தி வைத்தவர், பசுமலை. டாக்டர் நாவலர் சோமசுந்தர பாரதியார் அவர்கள்.

நூல் ஆலைகள்:

தம் 27 ஆவது வயதில் தொழில் துறையில் இறங்க எண்ணி மதுரைக்கு வந்தார். 29-ஆவது வயதில் மீனாட்சி ஆலையைத் தொடங்கி நடத்தி



னார். தொடர்ந்து பல நூற்பு ஆலைகளை பல நகரங்களில் நிறுவி உழைப்பால் உயர்ந்து வெற்றி கண்ட பெருமகன். தமிழகத்தில் 15க்கும் மேற்பட்ட ஆலைகளைத் தோற்றுவித்து நடத்தி, பெருமை பெற்றவர் அவர் ஒருவரே.

பெருஞ்சிறப்பு:

பல ஆலைகளைத் தொடங்கி நடத்தியதால் மட்டுமல்ல; பிற

ஆலை அதிபர்களாலும், தமிழகத்தில் மிகப் பெரும் பஞ்சு வணிகர்களாலும், ஏழைத் தொழிலாளர்களாலும், அரசாங்க அதிகாரிகளாலும், அரசியல் தலைவர்களாலும், பொது மக்களாலும் போற்றும்படி வாழ்ந்ததே அவர் அடைந்த பெருஞ் சிறப்பாகும்.

நூல் நிலையம்:

அவர் பஞ்சாலைகளைத் தோற்றுவித்து பருத்தி நூல்களை மட்டும் ஆராயவில்லை. பழந்தமிழ் நூல்களையும் ஆராய்ந்தார். அவர் படித்தறிந்த நூல்கள் அனைத்தையும் அவரது மதுரை நகர் மாளிகையில் கண்டு மலைத்து நின்றவர் பலர். அந்நூல் நிலையம் ஒரு பல்கலைக் கழகத்தின் நூல் நிலையம் போன்று காட்சியளிக்கும்; அங்கு நூல்கள் ஒழுங்காகவும் அழகாகவும் அடுக்கி வைக்கப் பெற்றிருப்பது மட்டுமல்ல; ஒவ்வொரு நூலிலும் அவர் எழுதி வைத்துள்ள அடிக்குறிப்பும் காணப்பெறும். இவற்றினைக் கண்டு வியப்படைந்தோரில் யானும் ஒருவன்.

தமிழறிஞர்கள்:

பசுமலை டாக்டர் சோமசுந்தர பாரதியார் அவர்களே இவரது தமிழாசிரியர். சிறந்த இலக்கணங்களை சேலம் அ. வரதநஞ்சைய பிள்ளை அவர்களிடத்திலும் சைவ சமய உண்மைகளை சித்தாந்தச் செல்வர் ஔவை. துரைசாமி பிள்ளை அவர்களிடத்திலும் கற்றறிந்தவர். மறைமலை அடிகள், திரு. வி க., எம். எல். பிள்ளை, பண்டிதமணி ஆகியோரிடத்தும் பெரும் பற்றுக் கொண்டவர்.

உள்ளத்துணிவு:

வெள்ளையர் ஆட்சியில், காங்கிரஸ் இயக்கத்திலிருந்து காந்தியடிகள் வழியில் நாட்டுப் பற்றுடன் நன்கு உழைத்தவர். அப்படியிருந்தும் 1938-ல் நான் திருச்சியில் நடத்திய தமிழக இந்தி எதிர்ப்பு மகாநாட்டில் முதன் முதலாக தமிழ்க் கொடியை ஏற்றி வைத்து தமிழ் முழக்கம் செய்து இந்தியை மிகத் துணிச்சலோடு எதிர்த்து நின்றவர் தியாகராசர்.

புலவர் குழு:

திருச்சியில் தொடங்கப் பெற்ற கடைச் சங்க காலத்திய புலவர்களைப் போன்ற நாற்பத்தொன்பது புலவர் பெருமக்களடங்கிய தமிழகப் புலவா குழுவை மதுரைக்கு அழைத்து தன் இல்லத்தில் விருந்தளித்து அனைவருக்கும் புத்தாடை கொடுத்து மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் வைத்து தமிழ் ஆராயச் செய்து பெருமகிழ்ச்சி அடைந்தவர் அவர்.

கல்வி நிலையங்கள்:

எவரிடத்தும் நன்கொடை பெறுமல், தன் வருவாயைக் கொண்டே, கலைக்கல்லூரி, பொறியியற் கல்லூரி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, சில உயர்நிலைப் பள்ளிகள், பல தொடக்கப் பள்ளிகள் முதலியவற்றைத் தொடங்கி பொது மக்களுக்கு உதவிய பெருந்தகையாளர் கருமுத்து. சுருங்கக் கூறின், ''ஒரு அரசாங்கம் செய்ய வேண்டிய பணிகளை தியாகராசர் தனி ஒருவராக செய்து முடித்திருக்கிறார்'' என்றே கூற வேண்டும்.

கலையழகு:

கலைத்தந்தை அவர்கள் ஒரு கட்டடக்கலைஞர். கட்டடத்திலும் ஒரு கலையழகை - கலையழகிலும் ஒரு தனித் தன்மையைக் கண்டவர். சென்னை, மதுரை, கோடைக்கானல், குற்றாலம் முதலிய இடங்களில் அவரது மாளிகைகளில் அவரின் கைவண்ணத்தை கலையழகின் தனித்தன்மையைக் கண்டு மகிழலாம்.

அரசியல்:

1938க்குப் பிறகு காங்கிரசில் இருந்து விலகினர். இந்தி எதிர்ப்பு கிளர்ச்சிக்குப் பிறகு எந்த அரசியல் கட்சியிலும் அவர் தலையிடவில்லை. நடு நிலைமை வகித்து தமிழ்ப்பணி மட்டும் புரிந்து வந்தார். என்றுலும் பல அரசியல் தலைவர்களுடன் நட்புக் கொண்டிருந்தார்.

சமயப்பற்று:

சைவ சமயத்தில் ஆழ்ந்த பற்று உடையவர். திருக்கோயில் வழிபாட்டில் சிறந்தவர். சைவ உணவையே உண்பவர். அவரது முகத்தை திருநீறு எப்போதும் அழகு செய்து கொண்டிருக்கும்.

வாழ்க கருமுத்துவின் புகழ்!

வளர்க அவர் செய்த பணிகள்!!

நன்றி : ருக்மாக்
சிறப்பு மலர்

முத்தூர் வாணியங்குடி அடைக்கலம் காத்த அம்மன் கோயில் குட நீராட்டு விழா

நாட்டரசன்கோட்டை அருகே உள்ள முத்தூர் வாணியங்குடியில் புதிதாகத் திருப்பணி செய்யப் பெற்றுள்ள அடைக்கலம் காத்த அம்மன், வெற்றி விநாயகர், சுப்பிரமணியர் மற்றும் பரிவார தெய்வங்களுக்கு 13-6-90 புதன் கிழமை காலை 7-15 மணி அளவில் திருக்குட நன்னீராட்டு விழாச் சிறப்பாக நடைபெற்றது.

குட நீராட்டையொட்டி 5 ஓம குண்டங்களுடன் யாக சாலை அமைக்கப் பெற்றிருந்தது. 12-6-90 மாலையும் 13-6-90 காலையும் யாக சாலைப் பூஜைகள் நடை பெற்றன.

சர்வசாதகம் திருவாடானை

கணேசக் குருக்கள் தலைமையில் நாட்டரசன்கோட்டை காளீஸ்வரக் குருக்கள், திருவாடானை போதகம் சந்திரசேகரக் குருக்கள், ஏரியூர் நடராஜக் குருக்கள் நாட்டரசன்கோட்டை தியாகுக் குருக்கள் உப்பூர் ராஜப்பாக் குருக்கள் பாகனேரி செல்லப்பாக் குருக்கள் சினமங்கலம் கைலாசக் குருக்கள் பட்டமங்கலம் வி. சண்முகசுந்தரம் ஆகியோர் யாகசாலைப் பூஜை, குடநீராட்டு ஆகியவற்றில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

குடநீராட்டையொட்டி 12-6-90 அன்று ''சத்தியவான் சாவித்திரி'' நாடகமும் 13-6-90 அன்று ''வள்ளி திருமணம்'' நாடகமும் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. வெற்றி விநாயகர் சன்னதியை தம் செலவில் அமைத்துள்ள திருப்பணிக் குழுவின் தலைவர் பட்டமங்கலம் வீர. நா. கருப்பன் செட்டியார் அவர்களுக்கும் சுப்பிரமணியர் சன்னதியை அமைத்துள்ள திரு. கா. உ. பெரி. காசி அம்பலம், திரு. முத்தையா அம்பலம் ஆகியோருக்கும் விழாக் குழு சார்பில் பொன்னாடை அணிவித்துச் சிறப்புச் செய்யப் பெற்றது.

குடநீராட்டு விழாவின் போது 'தமிழ்த் தென்றல்' புலவர் திரு. சுப. காளிமுத்து நேர்முக வர்ணனை செய்தார். 13-6-90 பகல் 2மணி அளவில் மகா அபிடேகம் நடைபெற்றது.

முத்தூர் வாணியங்குடி கிராமம் 300 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்றும் அங்கு இளையாத்தக்குடி-பட்டினசாமி, வைரவன் கோயில், சூரக்குடி, மாத்தூர் மணலூர் பிரிவைச் சேர்ந்த நகரத்தார்கள் முன்னாளில் வாழ்ந்து பிறகு வேறு ஊர்களுக்குச் சென்றிருக்கிறார்கள் என்றும் அங்குள்ள அடைக்கலம் காத்த அம்மனுக்கு 186 ஆண்டுகளுக்குப் பிறகு இப்போது குடநீராட்டு நடை பெற்றுள்ளது என்றும் திருப்பணிக் குழுவின் தலைவர் பட்டமங்கலம் வீர. நா. கருப்பன் செட்டியார் அவர்கள் தெரிவித்தார்கள்.

சௌகரியம் ஏதுமில்லாத அக்கிராமத்தில் சுமார் நான்கு ஆண்டுக்காலம் திருப்பணி வேலைகளைத் தானே முன்னின்று பார்த்து குட நீராட்டு விழாவைச் சிறப்பாக நடத்தி முடித்த 80 வயது கருப்பன் செட்டியார் அவர்களை நகரத்தார்கள் வெகுவாகப் பாராட்டினார்கள்.

குட நீராட்டு விழாவில் நாட்டரசன்கோட்டை பட்டமங்கலம் மற்றும் பல ஊர் நகரத்தார்களும் நாட்டார்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

மணி விழா

நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷனின் முன்னாள் இயக்குநர் கிழப்பூங்குடி திரு. கூ. நா. சித. நா. கருப்பஞ் செட்டியார் - திருமதி ராஜம் என்கிற கண்ணாத்தாள் ஆச்சியின் 60ஆம் ஆண்டு நிறைவு மணி விழா பிள்ளையார்பட்டியில் 11-5-90 அன்று சிறப்பாக நடைபெற்றது.

பிஎல். சிதம்பரம் தேர்வு

மதுரை - இராமநாதபுரம் யுனைட்டெட் ஃபிலிம் டிஸ்டிரிபியூட்டர்ஸ் அசோசியேஷனின் பொருளாளராக இராயவரத்தைச் சேர்ந்த சாந்தா ஃபிலிம்ஸ் திரு. பிஎல். சிதம்பரம் தொடர்ந்து மூன்றாவது முறையாக இந்த ஆண்டும் போட்டியின்றித் தேர்வு செய்யப்பட்டுள்ளார். காரைக்குடியைச் சேர்ந்த ஸ்ரீராம் பிலிம்ஸ் (மதுரை) திரு என். எஸ். சொக்கலிங்கம் செயற் குழு உறுப்பினராகத் தேர்வு செய்யப் பட்டுள்ளார்.

ஒன்பதாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் : 16-2-1930 மறைவு : 27-6-1981

லெட்சுமி M. சிங்காரம் செட்டியார்

அச்சடிக்கும் காகிதத்தின் அரசர் ஆனார்
அறப்பணிகள் தொடங்குங்கால் அமரர் ஆனார்
நிச்சயமாய் லெட்சுமி சிங்காரம் செய்த
நிகரில்லாத் தனிச்சேவை நெஞ்சில் நிற்கும்

வேலூரில் பாராட்டு விழா

வட ஆற்காடு மாவட்ட நகரத்தார் சங்கத்தின் சார்பில் வேலூரில் 3-6-90 அன்று அதன் தலைவர் திரு. பிஆர். மெய்யப்பச் செட்டியார் இல்லத்தில் பாங்க் ஆப் மதுரையின் தலைவர் திரு. சுப சபாபதி அவர்களுக்குச் சிறப்பான வரவேற்புக் கொடுக்கப்பட்டது.

திரு. பிஆர். மெய்யப்ப செட்டியாரின் வரவேற்புரைக்குப் பிறகு செயலாளர் திரு. என். கே. வெங்கடாசலம், திருமதி மீனாள் கற்பக கணபதி ஆகியோர் வங்கித் தலைவரைப் பாராட்டிப் பேசினர்.

தமக்களிக்கப்பட்ட வரவேற்புக்கும் பாராட்டுக்கும் நன்றி தெரிவித்துப் பேசிய திரு. சபாபதி நம்மவர்கள் செய்துவரும் தொழில்களுக்கும் தொடங்கவிருக்கும் தொழிற்சாலைகளுக்கும் தமது வங்கி மூலம் நிதிஉதவி அளிக்க ஏற்பாடு செய்வதாகச் சொன்னார். திரு. வி. சுந்தரம் நன்றி கூறக் கூட்டம் முடிந்தது. அனைவருககும் சிற்றுண்டி வழங்கப்பட்டது.

உங்கள் குரல்

ஜூன்' 90 "நகரத்தார் குரல்" இதழைப் பார்த்தோம். வி. என். சிதம்பரம் செட்டியார் அவர்கள் புதல்வனின் திருமணப் படங்கள் ரொம்பவும் அருமையாக இருந்தன. அமைச்சர் பெருமக்கள் சிவாஜிகணேசன் உட்பட திரை நட்சத்திரங்கள் மற்றும் மணமகன், மணமகளின் பெற்றோர்கள் ஆகியோரை நேரில் பார்த்து திருமண விழாவில் நாங்களும் கலந்து கொண்ட உணர்வு ஏற்பட்டது. ரொம்பவும் ரசித்தோம்; சுவைத்தோம். அந்த நான்கு பக்கங்கள் மிகத் தாமதமாகவே நகர்ந்தன. மேலும் இரண்டு பக்கங்களைச் சேர்த்தால் குறைந்தா போய்விடுவீர்கள்?

அரு. சோம. சண்முகநாதன்
உலகம்பட்டி

கலை, அரசியல், வணிகம், இலக்கியத் துறைகளைச் சேர்ந்த பெருமக்களும் நகரத்தார்களும் பெருமளவில் கலந்து கொண்டு சிறப்பித்த வி. என். சிதம்பரம் செட்டியார் அவர்களது இல்லத் திருமணம் நகரத்தார் பெருமை கொள்ளும் வண்ணம் இருந்தது. "நகரத்தார் குரல்" அவற்றைத் தெளிவாக படங்களுடன் வெளியிட்டது மேலும் சிறப்பு.

'ப்ளோரா' பழநிக்குமார்
கண்டவராயன்பட்டி

மே' 90 இதழில் முனைவர் தமிழண்ணல் அவர்கள் எழுதிய சாமான் பரப்புதல் பற்றிய கட்டுரைக்கு ஜூன்' 90 இதழில் தம்பி திரு. பழ. இராமசாமி விளக்கமளித்து வருத்தப்தரக்கூடியதாக இருப்பதாக எழுதியிருந்தார். தமிழண்ணல் அவர்கள் கேள்விப்பட்டதைச் சொன்னதற்குத் தம்பி வருத்தம் தெரிவிக்க வேண்டியதில்லை.

நம்மில் பலர் இப்போது போராட்டம் இல்லாமல் அவரவராக உணர்ந்து சாமான்களைப் பரப்பாமல் மாப்பிள்ளை வீடுகளுக்கு ஏற்றி அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள்.

நகரத்தார்கள் உணரத் தெரிந்தவர்களாக இருப்பதால் தான் வறுமையை விரட்டி செழிப்புடன வாழ்ந்து வருகிறார்கள். இளமைத் துடிப்புள்ள தம்பி திரு. பழ. இராமசாமியின் ஆர்வத்திற்கும், முயற்சிகளுக்கும் பாராட்டுக்கள்.

கயல் மெ. பழநியப்பன்
கண்டரமாணிக்கம்

கூட்டுத் திருமணத்திற்கு உதவிய வழக்கறிஞர் புதல்வியின் பரந்த உள்ளத்தை அறிய முடிந்தது. அவருடைய அந்த பரந்த மனப்பான்மைக்கு ஒவ்வொரு

வரும் தலை வணங்க வேண்டும். அச்செய்தியை வெளியிட்ட குரலுக்கும் நன்றி.

பி.எல். இராமநாதன், சென்னை

நமது ''குரல்'' முகப்பு அட்டையில் தெய்வப்படங்களைத் தொடர்ந்து வெளியிட்டு வருவது சிறப்பாக உள்ளது. ஜூன்'90 இதழில் திருமணஞ்சேரி சுவாமி, அம்மன் படங்களை அழகாக வெளியிட்டிருக்கிறீர்கள். அந்த மாதிரிப் படங்களை வெளியிடும் போது உள்ளே அந்த ஊர் எங்கு உள்ளது. அக்கோயிலின் சிறப்பு என்ன என்பது போன்று சிறு குறிப்பு வெளியிட்டால் நல்லது ஆன்மீகம் வளர்ந்து வரும் இந்நாளில் அவைகளை வெளியிட்டால் புனிதப் பயணம் செல்லும் என் போன்றோருக்கு அது உதவியாக இருக்கும்.

பி.எஸ். பிச்சப்ப செட்டியார்

மணப்பாறை

(திருமணஞ்சேரி கிராமம் தஞ்சை மாவட்டத்தில் கும்பகோணம் - மாயவரம் சாலையில் பாபநாசத்திற்கு வடக்கே சுமார் 5 கி. மீ. தொலைவில் உள்ளது. திருமணம் ஆகாத ஆண், பெண் இருவரும் அங்கு சென்று வழிபாடு செய்தால் விரைவில் திருமணம் நடைபெறுமாம்.

— ஆசிரியர்)

ஜூன்' 90 ''நகரத்தார் குரல்'' இதழில், தமிழண்ணல் அவர்கள், முறை தலைகளைப் பற்றி மிக நன்றாக எழுதியிருந்தார்கள். முறைதலைகளை உடனடியாக நிறுத்த முடியாவிட்டாலும், சிறிது சிறிதாகக் குறைத்து, வீண் சிரமங்களைத் தவிர்ப்பது, எல்லோருக்கும் நல்லது. நகரத்தார் சங்கங்களும், நகரத்தார் இளைஞர் சங்கங்களும், சிந்தித்து செயல்பட்டால் வெற்றி கிட்டும். மற்ற நம்மவர்களும், குறிப்பாக பெண்களும், வசதி படைத்தவர்களும் நன்கு ஒத்துழைக்க வேண்டும்.

மேலைச்சிவபுரி முத்துராமன்

திருச்சூர்

பள்ளத்தூரைச் சேர்ந்த, வழக்கறிஞர் திரு. இராமநாதன் செட்டியாரின் புதல்வி, தன்னுடைய திருமணத்தில் சீர்வைத்த பொருட்களை, கூட்டுத் திருமணங்களுக்கு உதவும் நோக்கில், திருச்சி நகரத்தார் சங்கத்திற்கு அன்பளிப்பாக வழங்கியிருப்பது, காந்தியடிகளிடம், பெண்கள் தங்கள் கழுத்தில், கைகளில் இருந்த நகைகளை எல்லாம் கழற்றிக் கொடுத்து, நிதியில் சேர்த்துக் கொள்ளச் சொன்னது நினைவிற்கு வருகிறது. அப்பெண்ணின் நல்ல உள்ளத்தை எவ்வளவு பாராட்டினாலும் தகும். பல பெண்களுக்கு வாழ்வளித்த பெருமையும் சேர்கிறது.

எம் இராஜாமணி, திருச்சூர்

நாகப்பன்-கீதா திருமணம்; கூட்டுத் திருமணத்திற்கு உதவிய பெண்; முனைவர் திரு தமிழண்ணல் முனைவர் திரு. சுப. அண்ணாமலை (மணிவண்ணன் மடல்) ஆகியோரின் திருமணம் பற்றிய கருத்துக்கள், கூட்டுத் திருமணம் என ஜூன்இதழ் திருமணச் சிறப்பிதழாகவே இருந்தது.

ராம. வ. இராமசாமி


கோட்டையூர்

எக்ஸ்போ பிரிண்டர்ஸ் 20, கிருஷ்ணாபுரம் 4-வது குறுக்குத் தெரு மதுரை-625 009 ல் அச்சிட்டு சுப. அ. நடராசன் அவர்களால் 25, வடக்குச் சித்திரை வீதி. மதுரை-625 001லிருந்து வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர் : வி. என். சிதம்பரம்

இராங்கியத்தில் சிவாஜிகணேசன்!

நமது இதழின் ஆசிரியர் திரு. வி. என். சிதம்பரம் செட்டியார் அவர்களது புதல்வன் செல்வன் நாகப்பன் - செல்வி கீதாவின் திருமணத்திற்கு, தமது துணைவியார் திருமதி கமலா சிவாஜியுடன் முதல் நாளே (5-5-90) இராங்கியத்திற்கு வருகை தந்தார் 'நடிகர் திலகம்' திரு. சிவாஜி கணேசன். அங்கு வி. என். சிடி. அவர்கள் இல்லத்தில் விருந்துண்டு திரும்பிய திரு. சிவாஜி வி. என். சிடி. அவர்களின் தாயார் திருமதி பார்வதி ஆச்சியைப் பார்த்து அவர்கள் அருகே அமர்ந்து கலகலப்பாகப் பேசிக் கொண்டிருந்தார். அப்போது அருகில் வந்த வி. என். சிடி. அவர்களின் முகத்தைப் பிடித்தபடியே "எல்லோரும் சம்பாதித்த பணத்தைக் கோடம்பாக்கத்தில் செலவழித்து வருகிறார்கள். உங்கள் மகன் கோடம்பாக்கத்தில் சம்பாதித்து உங்களுக்கு அனுப்பிக் கொண்டே இருக்கிறார்" என்று சிரித்துக் கொண்டே கூறினார்.

— "எல்லெல்"



நடிகர் திலகம் திரு. சிவாஜியோடு வி. என். சிடி. அவர்களும் அவர்களது தாயார் திருமதி பார்வதி ஆச்சி அவர்களும்.